## ‘வெங்கொடுமை ஆட்சியின் விதிமுடிப்போம்’ என

# தமிழ்நாடெங்கும் திரண்டு கழகத்தினர் ஆர்ப்பாட்டம் - கைது!



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது கண்டித்து தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டியில் மகாராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் த.வெ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைதைக் கண்டித்து காரைக்கால் மாநில தி.மு.க. அமைப்பாளரும் புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எ.எம்.எச் நாஜிம் தலைமையில் காரைக்காலில் தி.மு.க. நிர்வாகிகள் முக்கிய வீதியான பாரதியார் வீதியில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



திருச்சியில் மாநகரச் செயலாளர் – மேயர் அன்பழகன் தலைமையில் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கைதாகி சிறை சென்றனர்.



கழக இளைஞர் அணி செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் கைது செய்ததை கண்டித்து நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் பழைய பேருந்து நிலையம் மணிக்கூண்டு அருகே மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி, மாநகராட்சி துணை மேயர் பூபதி மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட 60 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்



கழக இளைஞர் அணி செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்ததைக் கண்டித்து நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில் புதிய பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகே நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த த.வெ.க. அரசைக் கண்டித்து நாகையில் வெளிப்பாளையம் மறைமலை அடிகளார் சிலை அருகே நாகை மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. உடன் மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகரக் கழக செயலாளர் இரா.மாரிமுத்து, நாகை வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் சிக்கல் என்.ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த பாசிச த.வெ.க. அரசைக் கண்டித்து கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர், சங்கராபுரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் தலைமையில் 200க்கும் மேற்பட்ட கழகத்தினர் சங்கராபுரம் மும்முனை சந்திப்பு அருகே சாலை மறியலில் ஈடுபட்டு பல்வேறு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். இதனால் சங்கராபுரம் பகுதியே பரபரப்பாக காணப்பட்டது.



திருப்புவனத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் சேங்கைமாறன் தலைமையில் 100 க்கு மேற்பட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.